**தலைப்பு 327 – காணிப் பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காணிப் பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக் கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காணிப் பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

--------------------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய என்னால் அரசயலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையின் 1.6.2(ஆ) பந்தியில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் கீழே காட்டப்பட்டிருந்த அவதானிப்புக்களில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் உரிய சொத்துக்களின் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

-------------------------

### 2.1 செலவின முகாமைத்துவம்

--------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) முறையான விடயங்களை ஆராய்ந்து தேவையான நிதி ஏற்பாடுகளை பெற்றுக் கொள்ளாமை மற்றும் நிர்ணயிக்கப்பட்ட காலப் பகுதியில் குறித்த இலக்கிடப்பட்ட செயலாற்றல் இலக்கினை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக 10 மீண்டெழும் செலவின விடயங்களுக்குரிய மொத்தம் ரூபா 6,435,280 ஆன சேமிப்புக்கள் மற்றும் 08 மூலதன செலவின விடயங்களுக்குரிய மொத்தம் ரூபா 12,899,464 ஆன சேமிப்புக்கள் காணப்பட்டன. | நி.பி 50 இன் பிரகாரம் சரியாக செலவின மதிப்பீடு இயலுமானவரை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திணைக்களத்தின் ஒட்டுமொத்த மீண்டெழும் செலவின விடயங்களிலிருந்து 97% செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே ஒட்டுமொத்த மூலதனச் செலவினத்தில் 91% சேமிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 327-02-01-1406 ஆம் இலக்க செலவின விடயம் – குத்தகை வாகனங்களுக்கான வட்டிக் கொடுப்பனவு மற்றும் 327-02-01-2108 ஆம் இலக்க செலவின விடயம் - நிதிக் குத்தகை முறைமையின் கீழ் வாகனக் கடன் மீள் கொடுப்பனவு ஆகிய இரண்டு செலவின விடயங்களுக்கும் | குறைநிரப்பு நிதிஏற்பாடு மூலம் பெற்றுக்கொண்ட நிதிஏற்பாடு அச்செயற்பாட்டிக்காக பயன்படுத்தப்பட வேண்டும். | நிதிக் குத்தகை முறைமையின் கீழ் 03 வாகனங்களை கொள்வனவு செய்யும் பெறுகை செயற்பாடுகள் 2019 யூன் மாதத்தின் முதல் வாரம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட நிதி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டதுடன் அவர்களால் வழங்கப்பட்ட கடன் அறவீட்டு விபரங்களின் பிரகாரம் 2019 யூலை மாதம் முதல் |

| | | | |
|---|---|---|---|
| | வருடாந்த மதிப்பீட்டில் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வில்லை. பின்னர் முறையே ரூபா 1,795,000 தொகை மற்றும் ரூபா 2,726,000 ஆன குறைநிரப்பு நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. அக்குறை நிரப்பு நிதி ஏற்பாடுகளில் முறையே 16 சதவீதம் மற்றும் 15 சதவீதம் ஆண்டின் இறுதியில் சேமிக்கப்பட்டிருந்தன. | | திசெம்பர் வரை குறித்த குறைநிரப்பு நிதிஏற்பாடு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அந்நிதி நிறுவனம் உடன்படிக்கைகளை ஆகஸ்ட் மாதம் மேற்கொண்டதால் அதன் பின்னர் தவணை அறவீடு ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டிற்காக 05 தவணைகள் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தன. |
| (இ) | 327-02-01-1404 ஆம் இலக்கம் மற்றும் 327-02-01-2102 ஆம் இலக்க இரண்டு செலவின விடயங்களுக்குரிய மொத்தம் ரூபா 1,076,000 ஆன நிதி ஏற்பாடு நி.பி 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களிலிருந்து மாற்றப்பட்டிருந்ததுடன் இவ்வாறு மாற்றப்பட்ட நிதி ஏற்பாடுகளின் மொத்தம் ரூபா 220,945 அல்லது 21 சதவீதம் மாத்திரமாக இருந்தது. | ஏனைய செலவின விடயங்களுக்காக நிதி ஏற்பாடு மாற்றப்பட்டால் மாற்றப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட வேண்டும். | உள்ளூராட்சி மன்றங்களில் இருந்து பட்டியல்கள் கிடைக்காமை மற்றும் பொருட்கள் கட்டளையிட்டும் வழங்குனரால் வழங்குவதற்கு தவறியதன் பேரில் இந்நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. |

## 2.2 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வேலை இடைநிறுத்தம் உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 26,998 ஐ அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடப்படாத கடன் மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இக்கடன் மீதிகளை அறவிடமுடியாத கடன் மீதியாக கருதி பதிவழிப்பதற்காக திறைசேரியிடமிருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| இலங்கையின் நில வளங்களை உச்ச அளவிலும் நிலைபேறாகவும் பயன்படுத்துவது திணைக்களத்தின் தொலைநோக்காக இருந்ததுடன் சுற்றாடல் சமநிலையை பேணி நிலைபேறாகவும் உச்ச அளவிலும் காணியை பயன்படுத்துவதற்கும் கொள்கையொன்றை தயாரித்து திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் | விரைவில் காணி பயன்பாட்டுச் சட்டத்தை நிறைவேற்றப்பட வேண்டும் | இத் திணைக்களத்தின் தொலை நோக்கு மற்றும் செயற்பணியை நிறைவேற்றுவதற்கு காணி பயன்பாட்டுச் சட்டத்தை நிறைவேற்ற திணைக்கள மட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றது. |

திணைக்களத்தின் பிரதான செயற்பணியாகும். அந்த இலக்கு மற்றும் செயற்பணி என்பவற்றை அடைந்து கொள்வதற்காக தேசிய காணி பயன்பாட்டுச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு திணைக்களம் இதுவரை தவறியிருந்தது.

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2002 செப்தம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் செயலாற்றல் அறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | செயலாற்றல் அறிக்கை வரிசை அமைச்சிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) திணைக்களத்திடமிருந்த காரொன்று காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சிற்கு ஓராண்டிற்கு | திணைக்களத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை நிறைவேற்று வதற்காக வழங்கப்பட்டுள்ள | அமைச்சிற்கு கையளிப்பதற்கு உரிய ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளன. |

| | | | |
|---|---|---|---|
| | மேற்பட்ட காலமாக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அதனை இதுவரை கையளிக்கவோ அல்லது மீளப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்களை வேறு நிறுவனங்களுக்கு கையளிக்கும் போது திணைக்களத்தின் நோக்கங்களை நிறைவேற்று வதற்கு தடையில்லாத வகையில் அச்சொத்துக்களை முறையாக கையளிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | |
| (ஆ) | திருத்தம் செய்ய முடியாத நிலைமையில் காணப்படும் திணைக்களத்திற்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் 04 ஆண்டு காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. | விளைவற்ற சொத்துக்களை கையகற்ற வேண்டும். | திருத்தியமைத்தல் பொருளாதார ரீதியில் சாதகமாக இல்லாததால் கைதவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது |

## 3.4 நட்டங்களும் சேதங்களும்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| திணைக்களத்திற்குரிய WP-PF - 7633 ஆம் இலக்க மோட்டார் வாகனம் 2019 மே 22 ஆந் திகதி விபத்திற்குட்பட்டு ரூபா 48,816 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. இந்நட்டத்தை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நட்டங்கள் மற்றும் விட்டுவிடல் தொடர்பான கூற்றின் மூலம் வெளிப்படுத்தியிருக்கிவல்லை. | குறித்த நட்டத்தை இழப்புக்கள் விட்டுவிடல் தொடர்பான கூற்றின் மூலம் வெளிப்படுத்தபபட வேண்டும். | நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இந்நட்டம் தொடர்பாக பதிவுகள் விடுபட்டிருந்தன. |

## 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுச் சட்டத்தின் உரிய பிரிவின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். வருடாந்த கணக்குகள் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கையொப்பத்திற்காக காணி அமைச்சிற்கு சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்திலேயே வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் கையளிக்கப்பட்டுள்ளது. |

## 4 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2002 ஆம் ஆண்டின் போது காணி பயன்பாட்டுத் திட்ட உத்தியோகத்தரொருவர் காணி அமைச்சிற்கு முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்டிருந்தார். | பதவிப் பெயர்களின் பிரகாரம் திணைக்களத்திற்கு தேவையான உத்தியோகத்தராக இருப்பதால் அதன் பிரகாரம் அழைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வரிசை அமைச்சின் செயற்பாடுகளுக்காக காணிப் பயன்பாட்டு விடய அறிவுடன் உத்தியோகத்தரொருவர் அமைச்சிற்காக விடுவிக்கப்பட்டுள்ளார். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சிரேஷ்ட மட்டத்தில் 10 வெற்றிடங்களையும், மூன்றாம் மட்டத்தில் ஒரு வெற்றிடத்தையும் இரண்டாம் மட்டத்தில் 40 வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக முறையான நியமன அதிகாரியால் மேற்கொண்டு வருவதுடன் அந்த அதிகாரிகளுக்கு வெற்றிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. |